

திரு மா. திருநாவுக்கரசு



திரு அருணகிரிநாதர்

*சித்தியவான், மலேசியா*

**திரு மா. திருநாவுக்கரசு**

*அவர்கள் தொகுத்த*

# அருணகிரிநாதர் ஆய்வுக் களஞ்சியம்




## திருப்புகழில் பெரியோர்

*முனைவர்*

*முஸ்ரீமத் மௌன குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்*

*மலைக்கோட்டை, திருச்சிராப்பள்ளி - தமிழ்நாடு*

"செயற்கரிய செய்வர் பெரியர்" என்பது வள்ளுவர் வாக்கு. அதனால் செயற்கரிய செயல்களை செய்து அருள் அற்புதங்கள் நிகழ்வித்த அருளாளர்களை போற்றுகின்ற நூல் பெரிய புராணம் என்று பெயர் விளங்குகின்றது. அற்புத அருள் நிகழ்வுகள் செய்த மற்றைய அருளாளர்களையும் பெரியோர்களையும் அருளாளராக விளங்கிய, முருகப்பெருமானால் ஆட்கொள்ளப் பெற்ற 16-ம் நூற்றாண்டில் அவதரித்த, அருணகிரி நாதப் பெருமான் தம் சந்தத் திருப்புகழில் சொந்தப் பதிவுகளாக பதிவு செய்திருப்பது போற்றுதற்குரியதாகும்.

முன்னோர்களின் வாழ்க்கை வரலாற்றின் அற்புதங்களையும் தமது பிரபந்தங்களில் பதிவு செய்தல் என்பது பெரியோரை போற்றவும் துணைக் கோடலும் ஆகும். அவ்வகையில்,

அய்யா அருணாகிரியப்பா உனைபோல
மெய்யாகவோர்சொல் விளம்பினர் யார்? வையகத்தோர்
சாற்றரிதென்றே சற்றார்! தன்னையார்! முக்கனெந்தை
நாற்றிசைக்குங் கைகாட்டினான்

... என தாயுமானடிகள் போற்றிய அருணகிரி நாதப் பெருமான் போற்றிய சமயாச்சாரியார்கள் மற்றைய அருளாளர்களை பற்றி பதிவு செய்த சில பெரியோர்களை எடுத்துக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**ஞானசம்பந்தர்:**

ஏழாம் நூற்றாண்டில் சீர்காழியில் அவதரித்த ஞானசம்பந்த பிள்ளையார் சமண சமயம் தாழ சைவ சமயம் மேலோங்க, திருநீற்றின் ஒளி எண் திக்கும் ஒளி விளங்க, வேதநெறி தழைத்தோங்கவும், மிகுசைவத்துறை விளங்கவும் அவதரித்தவர். முருகப்பெருமானின் சாரூபம் பெற்றவர். உமையம்மையினால் ஞானப்பால் ஊட்டப்பெற்று பல அற்புதங்களை செய்தவர். அனல் வாதம் புனல் வாதம் முதலியவைகளை செய்தவர். எலும்புருவை பெண்ணாக்கியவர். எண்ணாயிரம் சமணர்கள் கழுவேற சைவத்தினை நிலை நிறுத்தியவர்.

சடமருவு விடையரவர் துங்கஅம் பங்கினின்
றுலகுதரு கவுரியுமை கொங்கைதந் தன்புறுந்
தமிழ்விரக உயர்பரம சங்கரன் கும்பிடுந் ...... தம்பிரானே. ... *(கொடியனைய - திருச்செந்தூர் திருப்புகழ்).*

பேணி யங்கெதி ராறு சென்றிட
மாற னும்பிணி தீர வஞ்சகர்
பீறு வெங்கழு வேற வென்றிடு ...... முருகோனே ... *(மூல மந்திரம் - பழநி திருப்புகழ்).*

பறித்ததலைத் திருட்டமணக்
குருக்களசட் டுருக்களிடைப்
பழுக்களுகக் கழுக்கள்புகத் ...... திருநீறு
பரப்பியதத் திருப்பதிபுக்
கனற்புனலிற் கனத்தசொலைப்
பதித்தெழுதிப் புகட்டதிறற் ...... கவிராசா ... *(குறித்தமணி - பழநி திருப்புகழ்).*

பொறியுடைச் செழியன்வெப் பொழிதரப் பறிதலைப்
பொறியிலச் சமணரத் ...... தனைபேரும்
பொடிபடச் சிவமணப் பொடிபரப் பியதிருப்
புகலியிற் கவுணியப் ...... புலவோனே ... *(கிறி மொழி - திருத்தணிகை திருப்புகழ்).*

வெடித்தமணர் கழுவேற ஒருத்திகண வனுமீள
விளைத்ததொரு தமிழ்பாடு ...... புலவோனே ... *(வரிக் கலையின் - திருத்தணிகை திருப்புகழ்).*

புழுகொழுகு காழி கவுணியரில் ஞான
புநிதனென ஏடு ...... தமிழாலே
புனலிலெதி ரேற சமணர்கழு வேற
பொருதகவி வீர ...... குருநாதா ... *(எழுகு நிறை - திருக்கழுக்குன்றம் திருப்புகழ்).*

மதுரையின் மீதால வாயினில் எதிரம ணாரோரெ ணாயிரர்
மறிகழு மீதேற நீறுப ...... ரந்துலாவச்
செழியனு மாளாக வாதுசெய் கவிமத சீகாழி மாமுனி
சிவசிவ மாதேவ காவென ...... வந்துபாடும் ... *(அழுது அழுது - திருசிராப்பள்ளி திருப்புகழ்).*

மருகா புராரி சித்தன் மகனே விராலி சித்ர
மலைமே லுலாவு சித்த ...... அங்கைவேலா
மதுரா புரேசர் மெய்க்க அரசாளு மாறன் வெப்பு
வளைகூனை யேநி மிர்த்த ...... தம்பிரானே. ... *(உருவேறவே - விராலிமலை திருப்புகழ்).*

சீட்டை யெழுதிவை யாற்றி லெதிருற
ஓட்டி யழல்பசை காட்டி சமணரை
சீற்ற மொடுகழு வேற்ற அருளிய ...... குருநாதா ... *(பாட்டில் உருகிலை - தீர்த்தமலை திருப்புகழ்).*

மதுர வாணி யுற்ற ...... கழலோனே
வழுதி கூனி மிர்த்த ...... பெருமாளே. ... *(எதிரிலாத பத்தி - கதிர்காமம் திருப்புகழ்).*

மதுரை நாட்டினி லேவாழ் வாகிய
அருகர் வாக்கினி லேசார் வாகிய
வழுதி மேற்றிரு நீறே பூசிநி ..... மிர்ந்துகூனும்
மருவு மாற்றெதிர் வீறே டேறிட
அழகி போற்றிய மாறா லாகிய
மகிமை யாற்சமண் வேரோ டேகெட ...... வென்றகோவே ... *(அதிக ராய்ப்பொரு - வேலூர் திருப்புகழ்).*

கருதுசட் சமயிகட் கமைவுறக் கிறியுடைப்
பறிதலைச் சமணரைக் குலமுதற் பொடிபடக்
கலகமிட் டுடலுயிர்க் கழுவினுச் சியினில்வைத் ...... திடுவோனே ... *(ஒருவரைச் - கரபுரம் - விரிஞ்சிபுரம் திருப்புகழ்).*

அளகைவணி கோர்கு லத்தில் வனிதையுயிர் மீள ழைப்ப
அருள்பரவு பாடல் சொற்ற ...... குமரேசா
அருவரையை நீறெ ழுப்பி நிருதர்தமை வேர றுத்து
அமரர்பதி வாழ வைத்த ...... பெருமாளே. ... *(களபம் மணி - திருமயிலை திருப்புகழ்).*

சீல வெண்பொடியி டாத வெஞ்சமணர்
மாள வெங்கழுவி லேறு மென்றுபொடி
நீறி டுங்கமல பாணி சந்த்ரமுக ...... கந்தவேளே ... *(மூல முண்ட - திருநல்லூர் திருப்புகழ்).*

கருது மாறிரு தோள்மயில் வேலிவை
கருதொ ணாவகை யோரர சாய்வரு
கவுணி யோர்குல வேதிய னாயுமை ...... கனபாரக்
களப பூண்முலை யூறிய பாலுண்
மதலை யாய்மிகு பாடலின் மீறிய
கவிஞ னாய்விளை யாடிடம் வாதிகள் ...... கழுவேறக்
குருதி யாறெழ வீதியெ லாமலர்
நிறைவ தாய்விட நீறிட வேசெய்து
கொடிய மாறன்மெய் கூனிமி ராமுனை ...... குலையாவான்
குடிபு கீரென மாமது ராபுரி
யியலை யாரண வூரென நேர்செய்து
குடசை மாநகர் வாழ்வுற மேவிய ...... பெருமாளே. ... *(சுருதியாய் - திருக்குடவாயில் திருப்புகழ்).*

உமைமுலைத்தரு பாற்கொடு ...... அருள்கூறி
உரிய மெய்த்தவ மாக்கிந ...... லுபதேசத்
தமிழ்த னைக்கரை காட்டிய ...... திறலோனே
சமண ரைக்கழு வேற்றிய ...... பெருமாளே. ... *(சமய பத்தி - பொதுப்பாடல்கள் திருப்புகழ்).*

**நாவுக்கரசர்:**

நடுநாட்டில் திருவாமூரில் ஏழாம் நூற்றாண்டில் அவதரித்தவர். சைவத்தில் இருந்து சமண சமயம் சார்ந்து மீண்டும் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டு சைவ சமயம் சார்ந்தவர். சமணர் அரசு விளைவித்த இடையூறுகளிலிருந்து தெய்வ அருளால் மீண்டவர். பல அரிய அற்புதங்களை செய்தவர். இவரைப் பற்றிய தனிக்குறிப்புகள் திருப்புகழில் மிகு கிடைக்கவில்லையெனினும், சமண சமய சார்ந்த நாவுக்கரசர் சைவத்திற்கு மீண்டும் வர வேண்டும் என்பதற்காக தாய் தந்தையரை இழந்தும், கணவராக வர இருந்தவர் போரிலே இறந்தபோதும், தம்பியும் சமண சார்ந்த சூழ்நிலையில் 'அம்பொன் முடி தாங்காது ஆருயிர்க்கும் அருள் தாங்கி' சைவத்திற்கு மீண்டும் நாவுக்கரசர் வருவதற்காக தவம் கொண்டு வாழ்ந்த திலகவதியாரின் சிறப்பினால் தான் நாவுக்கரசருக்கு இந்த நிலை உருவாயிற்று. இதனை போல், உலகியலில் மூழ்கி திளைத்திருந்த சகோதரரை (அருணகிரி நாதரை) சமய நெறிக்கு

ஆற்றுப்படுத்தியவர் அவருடைய தமக்கையார். அந்த நினைவின் தாக்கமே நாவுக்கரசரை போற்ற நினைத்தவர், நாவுக்கரசருடைய தமக்கையாரை போற்றினார்.

மாது புகழை வளர்க்குந் ...... திருவாமூர்

வாழு மயிலி லிருக்குங் ...... குமரேசா ... *(சீத மதியம் - திருவாமூர் திருப்புகழ்).*

**சுந்தரமூர்த்தி நாயனார்:**

திருமுனைப்பாடி நாட்டில் 9-ம் நூற்றாண்டில் அவதரித்த சுந்தரமூர்த்தி நாயனார் இறைவனுக்கு கயிலையில் திருத்தொண்டு புரிந்தவர். மாதர் மேல் மையல் தீர தென்திசை நோக்கி வந்தவர். இறைவன் திருவருளால் பல அற்புதங்களை செய்தவர். இறைவனால் தோழமை பேறு பெற்றவர். ஆவரைப் போற்றிய அருணகிரிநாதர்,

ஆத ரம்பயி லாரூ ரர்தோழமை

சேர்தல் கொண்டவ ரோடே முனாளினில்

ஆடல் வெம்பரி மீதே றிமாகயி ...... லையிலேகி

ஆதி யந்தவு லாவா சுபாடிய

சேரர் கொங்குவை காவூர் நனாடதில்

ஆவி னன்குடி வாழ்வா னதேவர்கள் ...... பெருமாளே. ... *(நாத விந்து - பழநி திருப்புகழ்).*

பரவைமனை மீதி லன்று ஒருபொழுது தூது சென்ற

பரமனரு ளால்வ ளர்ந்த ...... குமரேசா

பகையசுரர் சேனை கொன்று அமரர்சிறை மீள வென்று

பழநிமலை மீதில் நின்ற ...... பெருமாளே. ... *(கருவின் உருவாகி - பழநி திருப்புகழ்).*

ஒருசிறுவன் மணமதுசெய் போதி லெய்த்து வந்து

கிழவடிவு கொடுமுடுகி வாச லிற்பு குந்து

உலகறிய இவனடிமை யாமெ னக்கொ ணர்ந்து ...... சபையூடே

ஒருபழைய சருகுமடி ஆவ ணத்தை யன்று

உரமொடவ னதுவலிய வேகி ழிக்க நின்று

உதறிமுறை யிடுபழைய வேத வித்தர் தந்த ...... சிறியோனே ... *(இருளளகம் - திருவருணை திருப்புகழ்).*

இதப்பட்டெதி ரேபொதி சோறினை

யவிழ்த்திட்டவி நாசியி லேவரு

திசைக்குற்றச காயனு மாகிம ...... றைந்துபோமுன்

செறிப்பித்த கராவதின் வாய்மக

வழைப்பித்துபு ராணக்ரு பாகர

திருப்புக்கொளி யூருடை யார்புகழ் ...... தம்பிரானே. ... *(மதப்பட்ட - திருப்புக்கொளியூர் திருப்புகழ்).*

**மாணிக்கவாசகர்:**

பாண்டிய நாட்டில் திருவாதவூரில் அவதரித்தவர். அரிமர்த்தன பாண்டியனின் அமைச்சராக விளங்கினார். இறைவன் மீது நாட்டம் ஏற்பட போருக்கு பயன்படுத்தப்படும் குதிரையை வாங்க சென்றார். போரினால் மக்களின் வலிமை, நாடு அனைத்தும் அழியும் என அறிந்து கிடைத்த பொருளை கொண்டு நிலைத்த பொருளான இறைவனுக்கு திருக்கோயில் எடுப்பித்தார். அவரைப் போற்றி,

"பண் சுமந்த" பாடல் பரிசு பெற்றமையை,

செருக்கும் அம்பல மிசைதனில் அசைவுற
நடித்த சங்கரர் வழிவழி அடியவர்
திருக்கு ருந்தடி அருள்பெற அருளிய ...... குருநாதர்
திருக்கு ழந்தையு மெனஅவர் வழிபடு
குருக்க ளின்திற மெனவரு பெரியவ
திருப்ப ரங்கிரி தனிலுறை சரவண ...... பெருமாளே. ... *(அருக்கு மங்கையர் - திருப்பரங்குன்றம் திருப்புகழ்).*

வாசி வாணிகனெ னக்குதிரை விற்றுமகிழ்
வாத வூரனடி மைக்கொளுக்ரு பைக்கடவுள்
மாழை ரூபன்முக மத்திகைவி தத்தருண ...... செங்கையாளி
வாகு பாதியுறை சத்திகவு ரிக்குதலை
வாயின் மாதுதுகிர் பச்சைவடி விச்சிவையென்
மாசு சேரழுபி றப்பையும றுத்தவுமை ...... தந்தவாழ்வே ... *(ஆசை நாலுசதுர - பழமுதிர்ச்சோலை திருப்புகழ்).*

மதித்த முத்தமி ழாய்வினர் மேலவ
ருரைத்து ளத்திரு வாசக மானது
மனத்து ளெத்தழ கார்புகழ் வீசிய ...... மணிமாடத் ... *(நிரைத்த நித்தில - திருத்தவத்துறை திருப்புகழ்).*

வாத வூரனைம தித்தொருகு ருக்களென
ஞான பாதம்வெளி யிட்டுநரி யிற்குழுவை
வாசி யாமெனந டத்துவகை யுற்றரச ...... னன்புகாண
மாடை யாடைதர பற்றிமுன கைத்துவகை
யாறின் மீதுநட மிட்டுமணெ டுத்துமகிழ்
மாது வாணிதரு பிட்டுநுகர் பித்தனருள் ...... கந்தவேளே ... *(சீத வாசனை - மதுரை திருப்புகழ்).*

அறுபான்மும்மை நாயன்மார்களில் ஒருவராக விளங்கிய "தில்லைவாழ் அந்தணர்தம் அடியாருக்கும் அடியேன்" என்று இறைவனால் சுந்தரர் மூலம் உலகறிய செய்த பெருமை வாய்ந்தவர்கள் தில்லை மூவாயிரவர் அவர்களை போற்றிய அருணகிரிநாதர்,

வேத நூன்முறை வழுவா மேதினம்
வேள்வி யாலெழில் புனைமூ வாயிர
மேன்மை வேதியர் மிகவே பூசனை ...... புரிகோவே ... *(தாது மாமலர் - சிதம்பரம் திருப்புகழ்).*

**சோமாசி மாற நாயனார்:**

அம்பர் மாகாளத்தில் சோமயாகம் நடத்தினார். சுந்தரமூர்த்தி நாயனார் மூலமாக இறைவன் அங்கெழுந்த அவிர்பாக அளிக்கும் பேறுற்றார். அவரைப் போற்றி,

... மறைவேள்விச்
சோமாசி மார்சி வாய நமவென ... *(பாதாள மாதி - விராலிமலை திருப்புகழ்).*

அகத்தியர் பாணினிக்கு வடமொழியையும் தென்தமிழை இறைவனால் அகத்தியருக்கு மொழி அருளப்பெற்றது. அகத்தியரைப் போற்றி,

கொங்கைகுற மங்கையின் சந்தமண முண்டிடுங்
கும்பமுநி கும்பிடுந் ...... தம்பிரானே. ... *(தண்டை அணி - திருச்செந்தூர் திருப்புகழ்).*

குறுமுநிவ னிருபொழுதும் அர்ச்சித்து முத்திபெற
அறிவு நெறி தவநிலைகள் செப்புத் தமிழ்க்கினிய
குருகுமர பழநிவளர் வெற்புத் தனிற்றிகழு ...... பெருமாளே. ... *(சிறு பறையும் - பழநி திருப்புகழ்).*

குறுமுனிவ னேத்துமுத் ...... தமிழோனே ... *(பிறவியலை - பொதுப்பாடல்கள் திருப்புகழ்).*

**நக்கீரர்:**

சிவபூசையில் மனம் ஒன்றாது தவறுகின்றவர்களுக்கு பூதம் அவர்களைப் பிடித்துச் சென்று, சாப்பிடுவதற்காக ஒரு குகையில் அடைத்து வைத்தது. ஆயிரம் பேர் சேர்ந்தவுடன் சாப்பிடவேண்டும் என்று அது நினைத்தது. அதுபோழ்து சரவணப் பொய்கையில் பூசை செய்து கொண்டிருந்த நக்கீரர், சிவ பூசை செய்கின்றபோது, ஒரு அரச இலை பாதி நீரிலும், பதி கரையிலும் விழ, நீரிலே விழுந்தது மீனாகவும், தரையிலே விழுந்தது பறவையாகவும், ஒரு பக்கத்திலே நீரிலே மீன் இழுக்க, கரையில் பறவை இழுக்க, இதனை கண்ணுற்றதால் பூசையில் மனம் தடுமாறியது. உடனே பூதம் அவரையும் சேர்த்து ஆயிரமாவது நபராக சிறையில் அடைத்தது. நக்கீரர் அந்த நேரத்தில் திருமுருகாற்றுப்படை பாடி, முருகனருளால் சிறையிலிருந்து மீண்டார். அந்நக்கீரரைப் பற்றி,

பொருதச மர்த்தா குத்திர துரகமு கக்கோ தைக்கிடை

புலவரில் நக்கீ ரர்க்குத ...... வியவேளே ... *(அகல்வினை - பழநி திருப்புகழ்).*

**பாரி:**

'கொடுக்கிலாதனை பாரியே என்று பாடினும் கொடுப்பாரில்லை' என்று சுந்தரரால் போற்றப்பெற்ற பாரிவள்ளலை அருணகிரி நாதர் போற்றிப் பாடுகிறார்.

வண்புகழ் பாரி காரி யென்றிசை வாது கூறி ... *(வஞ்சக லோப - குன்றுதோறாடல் திருப்புகழ்).*

**மனுநீதி மன்னன்:**

சோழ மன்னர்களில் நீதி வழுவாது வாழ்ந்த மன்னர் மனுநீதி சோழன். இவருடைய அரசாட்சியில் உயிரினங்களுக்கு சிறு தீங்குகூட நடைபெறாது. அவருடைய ஆட்சிக் காலத்தில் தாங்கிய மணி ஒலிக்க ஆரம்பித்தது. காரணம் இவை இளவரசரால் இளங்கன்று ஒன்று தேர்க்காலில் அடிபட்டு இறந்தது என்ற செய்தி அறிந்து தன் மகனையே தேர்க்காலில் இட்டு நீதியை நிலை நிறுத்திய மனுநீதி மன்னனையும் போற்றிப் பாடியுள்ளார்.

சுரபி மகவினை யெழுபொருள் வினவிட

மனுவி னெறி மணி யசைவுற விசைமிகு

துயரில் செவியினி லடிபட வினவுமி ...... னதிதீது

துணிவி லிதுபிழை பெரிதென வருமநு

உருகி யரகர சிவசிவ பெறுமதொர்

சுரபி யலமர விழிபுனல் பெருகிட ...... நடுவாகப்

பரவி யதனது துயர்கொடு நடவிய

பழுதின் மதலையை யுடலிரு பிளவொடு

படிய ரதமதை நடவிட மொழிபவ ...... னருளாரூர்ப்

படியு லறுமுக சிவசுத கணபதி

யிளைய குமரநி ருபபதி சரவண

பரவை முறையிட அயில் கொடு நடவிய ...... பெருமாளே. ... *(கரமு முளரி - திருவாரூர் திருப்புகழ்).*

இறைவனால் அகப்பொருள் இலக்கணமாக இறையாளர் களவியல் என்ற நூலினை எழுதி அரங்கேற்றம் செய்கின்றபோது, முருகப்பெருமான் உருத்திரசன்மனாக இருந்து பொருள் கேட்டு, பொருள் சுவையறிந்து கண்ணீர் துளிர்த்தாக வரலாறு சுட்டுகிறது.

"பொரு ...... ளதிகாரம்

ஈடாய வூமர் போல வணிகரி

லூடாடி யால வாயில் விதிசெய்த

லீலாவி சார தீர வரதர ...... குருநாதா" ... *(சீரான கோல - விராலிமலை திருப்புகழ்).*

என்ற பல பெரியோர்களைப் போற்றி துதித்தவற்றுள் சிலவற்றையே இக்கட்டுரையில் காணமுடிந்தது. வள்ளுவர் காட்டிய "பெரியோரை துணைக் கோடல்" என்பதற்கொப்ப "இப் பெரியோர் வழிநடந்து நலம் பெறுவோம்".